சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



திருச்சிராப்பள்ளி மாவட்டம், **திருஆனைக்கா**

# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோவில்

# திரு நீற்றான் மதில் வலம் வருதல் விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் நந்தன வருடம் புரட்டாசி மாதம் 13-ம் தேதி (29-9-2012) சனிக்கிழமை பூர்ண பௌர்ணமி திதி அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீரங்கம், திருஅண்ணாமலையார் ட்ரஸ்ட்டின் சார்பாகவும், சிவனடியார்களின் சார்பாகவும் **திருநீற்றான் மதில் வலம் வருதலும் குபேரலிங்கேஸ்வரர் சன்னதியில் விளக்கேற்றி** வழிபாடும் நடைபெறும் மேற்கண்ட நிகழ்ச்சியில் சிவனடியார் பெருமக்களும், பக்தர்களும், பொதுமக்களும் திரளாக கலந்துகொண்டு இறைவனின் திருவருள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருஆனைக்காவில் சிறப்புபெற்ற வரலாற்று முறையில் ஐந்தாம் பிரகாரம் அமைந்திருக்கும். **நம்வினை தீர்க்கும் திருநீற்றை** தங்கமாக்கிய எம்பெருமானின் திருவிளையாடல் படலமாக கொண்ட இத்தலத்தின் ஐந்தாம் பிரகாரத்தில் உள்ள (வீபூதி பிரகாரம்) **திருநீற்றான்** மதில்சுவற்றை சிவபெருமானே நேரில் ஒரு சித்தரை போல் வந்து மதில் சுவற்றை எழுப்பி அதில் பணியாற்றியவர்களுக்கு திருநீற்றை கூலியாக கொடுத்தார். பணியாளர்களின் உழைப்புக்கு ஏற்ப அத்திருநீறு தங்கமாக மாறியது என்று தலவரலாறு கூறுகின்றது. ஆகையால் இம்மதிலை திருநீற்றான் மதில் என்று அழைக்கப்படுகின்றது. இம்மதிலை வலம் வருபவர்களுக்கு துன்பங்கள் நீங்கி செல்வம் பெருகி இன்பமான வாழ்வும் - முக்தியும் பெறலாம்.

நிகழ்ச்சி நிரல் :-

**சிவகண வாத்திய முழக்கத்துடன், நால்வருடனும் தீபம் ஏற்றி**
**திருநீற்றான் மதில் வலம் வருதல்** புறப்படும் இடம் ராஜகோபுரம் முன்பு

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை **ஸ்ரீமத் குமாரசுவாமி** கட்டளைத் தம்பிரான் அவர்கள் திருவிளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தும், அதைத்தொடர்ந்து திருஆனைக்கா பன்னிருதிருமுறை வாரவழிப் பாட்டுக்கழகத்தின் தலைவர். தத்புருஷ்தேசிகர். சிவ ஸ்ரீ சொ. கிருஷ்ணன் ஐயா அவர்களும், குளித்தலை சீகம்பட்டி சிவத்திரு. கு. இராமலிங்கம் ஐயா அவர்களும் முன்னிலை ஏற்று விழாவை நடத்தி வைப்பார்கள்.

## குபேரலிங்கத்தின் பெருமையும், சிறப்பும் :-

குபேரலிங்கம் மிகப்பெரியதாகவும் அதிக ருத்ராட்சம் தாங்கியதாக உள்ளது. இத்தலத்தில் உள்ள குபேரலிங்கத்தினை குபேரன் பூஜித்து வழிபட்டதால்தான் சிவன் அருள் பெற்று பெரும் செல்வந்தன் ஆனான். நாமும் குபேரலிங்கத்தை வழிபட்டு இறைவன் அருள்பெற்று பெரும் செல்வந்தன் ஆவோம். இப்பொழுது மக்கள் கூட்டம் அதிகம் வரும் இடங்களில் ஒன்றாக குபேரலிங்கம் சன்னதி உள்ளது. அனைவரும் வருக இறைவன் திருவருள் பெறுக.

திருஅண்ணாமலையார் ட்ரஸ்ட், ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சிராப்பள்ளி சிவனடியார்களும் இணைந்து நடத்தும் திருவீதி உலா. தொடர்புக்கு : 88255 53395, 96775 22622, 98654 10449, 97891 68101

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

என்றும் இறைபணியில் : J.B.R. பிரிண்டர்ஸ், 16, அல்லிமால் தெரு, திருச்சி - 8.செல் : 99524 - 65466, 95245 21069



திருச்சி திருவானைக்கோயிலில் வீபூதி பிரகாரம் வலம் வரும் விழாவை மலைக்கோட்டை குமாரசாமி தம்பிரான் துவக்கி வைத்தார்.

### திருவானைக்காவலில்

# வீபூதி பிரகாரம் வலம் வரும் விழா

திருச்சி, செப். 30: திருவானைக்காவலில் வீபூதி பிரகாரம் வலம் வரும் விழா நேற்று நடந்தது.

திருவானைக்காவல் ஜெம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோயில் வரலாற்று சிறப்பு மிக்கது. இந்த கோயிலில் உள்ள ஐந்தாம் பிரகாரம் மிகவும் சிறப்பு வாய்ந்த பிரகாரமாகும். இந்த பிரகாரத்தை சிவபெருமான் சித்தர் வடிவில் வந்து கட்டினார் என்பது ஐதீகம். இந்த பிரகாரம் கட்டும் பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு சித்தர் வீபூதியையே கூலியாக தந்தார். அந்த வீபூதி அவரவர் உழைப்புக்கு ஏற்ப தங்க காசுகளாக மாறியதாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு பெருமைவாய்ந்த இந்த பிரகாரத்தை வலம் வந்து குபேர ஈஸ்வரனுக்கு விளக்குபோட்டு வழிபடும் வைபவம் நேற்று நடந்தது.

இதையொட்டி திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வருடன் தீபம் ஏற்றி வீபூதி பிரகாரம் வலம் வரும் வைபவம் நேற்று நடந்தது. ராஜகோபுரம் அருகே வலம்வரும் வைபவத்தை மலைக்கோட்டை ஸ்ரீமத் குமாரசாமி கட்டளை தம்பிரான் சுவாமிகள் திருவிளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைத்தார்.

திரு ஆனைக்கா பன்னிருத்திருமுறை வார வழிபாட்டு கழக தலைவர் தத்பருஷ்தேசிகர், கிருஷ்ணன், குளித்தலை சீகம்பட்டி ராமலிங்கம் முன்னிலை வகித்தனர். சிவனடியார்கள், சிவபக்தர்கள் ஆகியோர் வீபூதி பிரகாரத்தை வலம் வந்து தெற்கு வாசலில் உள்ள குபேர ஈஸ்வரனுக்கு தீபம் ஏற்றி வழிபட்டனர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.